இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 05
இறுதிப் பரீட்சை – 2008
LWU 3315/4312/4335 – பகிரங்க சர்வதேசச் சட்டம்
காலம்: மூன்று(03) மணித்தியாலங்கள்

திகதி: 09.04.2008 நேரம்: மு.ப 9.30 – ந.ப 12.30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துகளுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. 2008ம் ஆண்டு சனவரி முதல் திகதி வலுவுக்கு வரும்வகையில் கலாநிதி திமித்ரி யாகொவ், குரொஸ்னியா குடியரசின் காபுல்நாட்டிற்கான தூதுவராக புதிதாக நியமிக்கப்பட்டார். சனவரி 2ஆம் திகதியில் காபுலில் தனது புதிய நியமனத்தினை ஏற்றுக் கொள்வதற்கென குரொஸ்னியாவின் இருந்து புறப்பட்டார் என்பதுடன் அவருடன் அவரது குடும்ப அங்கத்தவர்களும் சென்றனர். அவர் காபுலிற்கு செல்லும் வழியில் இரண்டு தரிப்புக்கள் (transit) இருந்தன. முதலில் லுபாயில் இரண்டு நாட்கள் தரித்திருந்தார். அவர் லுபாயில் தங்கியிருக்கும் பொழுது சில பொதிகளுடன் இனம் தெரியாத சில நபர்கள் அவரை அணுகியதோடு அவர்கள் அவருடன் உரையாடுவதனை காணக்கூடிய இருந்ததுடன் பல்வேறு பொதிகளை கலாநிதி யாகொவ் இன் அலுவலக உத்தியோகத்தர்களிடம் கையளித்தனர். விட்னியில் மூன்று நாட்களாகப் பிரிக்கப்பட்ட தமது இரண்டாவது தரிப்பின் போது ஒரு நபருடன் கலாநிதி யாகொவ் உரையாடுவதனையும் சில ஆவணங்களை கையொப்பம் இடுவதனையும் காணக்கூடியதாக இருந்தது. அத் தரித்திருக்கும் காலப்பகுதியில் காலநிதி யாகொவ் இன் இரு இளம் வயது புதல்வர்களும் மற்றும் மைத்துணர்களும் பொருட்களை வாங்குவதற்கு கடைக்குச் சென்றதுடன் விட்னி அரசிற்கு எதிரான எதிர்ப்பு ஊர்வலத்திலும் பங்கு கொண்டனர். பின்னர் எதிர்ப்பு ஊர்வலம் கலவரமானதுடன் கலவரத்தில் பங்கு கொண்டமை காரணமாகவும் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை காரணமாகவும் விட்னி பொலிசாரினால் காலநிதி யாகொவின் மகன்மார்களும் மைத்துணர்களும் உள்ளடங்கலாக கலவரத்தில் பங்கு கொண்ட அணைவரும் தொழில் காவலில் வைக்கப்பட்டனர்.

அதே வேளை கலாநிதி யாகொவ உம் அவரது பாரியாரும் காபுலின் சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர். திரு. யாகொவ் இற்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் சொந்தமான பொதிகளை நம்பகரமான அடிப்படையில் செயற்பட்ட சுங்க அதிகாரிகள் நிறுத்திவைத்தனர். பொதிகளைப் பரீட்சிக்கும் பொழுது அதி நுட்பமுடைய ஆயுதங்களின் விபரக்கோவையும் சமத்துவத்திட்காக மோதும் கிழச்சி குழுவின் கட்டுப்பாட்டில் இருக்கும் காபுலின் கஷ்டப்பிரதேசத்தில் வசிக்கும் ஓர் நபருக்கு முகவரியிடப்பட்ட அதிநுட்பமான வானொலி ஒலிபரப்பு கருவியும் கண்டு பிடிக்கப்பட்டது. இப்பொருட்கள் திருமதி யாகொவ் இற்குரிய பொதிகளில் காணப்பட்டன. காபுலில் அமுலில் இருக்கும் அசவசரகாலச் சட்டத்தின் கீழ் காபுல் பொலிசார், தடைசெய்யப்பட்ட பொருட்களை கலகக்காரர்களுக்கு வழங்கும் நோக்குடன் கடத்தியமைக்காக கலாநிதி யாகொவ் இனையும் அவரது பாரியாரையும் கைது செய்தனர்.

இதில் உள்ளடங்கியிருக்கும் சட்டப்பிரச்சினைகளை ஆராய்க.

2. " 'பயன்வலுக் கோட்பாட்டின்' அதிகாரமளிக்கப்படாததும் விஸ்தாரமானதுமான பிரயோகம் நீதிமன்றங்களால் சில வரையறுக்கப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது".

நீர் மேற்கண்ட கூற்றுடன் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

3. இறைமை, சுயநிர்ணயம் மற்றும் அங்கீகாரம் என்பன தேசியத்தின் மூன்று முக்கியமான தூண்களாக கருதப்படுகின்றன. எப்படியிருப்பினும் நவீன அரசியல் சூழலினால் அம்மூன்று தூண்களதும் நடைமுறை மற்றும் ஒப்பீட்டு முக்கியத்துவம் எல்லா வேளைகளிலும் பரீட்சிப்புக்கு உட்படுகின்றது.

மேற்கண்ட கூற்றினை உதாரணங்களுடன் நுணுக்கமாக மதிப்பிடுக.

4. பின்வரும் சந்தர்ப்பங்களில் உள்ளடங்கியுள்ள சட்டப்பிரச்சினைகளை ஆராய்க.

(அ) டென்ய சனனாயகக் குடியரசின் பொதுத்தேர்தலின் விளைவாக, பொதுத்தேர்தலானது நியாயமற்றது எனவும் சட்டமுரணானது எனவும் கோருவதன் பேரில் இரு சமூகத்தவரிடையே மோதல் மூண்டது. பாரியளவு கொலைச் சம்பவங்களும் பாரியளவு மனித உரிமை மீறல்களும் தினந்தோறும் பதிவாகியது. ஐக்கியநாடுகள் பட்டயத்தின் அத்தியாயம் VII இன் கீழ் செயற்பட்ட பாதுகாப்புச்சபை டென்யாவிற்கு சமாதானத்தினை அமுல்படுத்தும் செயற் குழுவொன்றினை அனுப்பத் தீர்மானித்தது. மார்ச் 2007ம் ஆண்டு அச்செயற்குழு டென்யாவினை வந்தடைந்ததுடன் அச்செயற்குழு ரொமாலியா, சிசிலி மற்றும் விக்டோரியா ஆகிய நாடுகளின் இராணுவத்தினை உள்ளடக்கியிருந்தது. சமாதானத்தினை அமுல்படுத்தும் செயற்குழுவானது கொலை, குழுக் கற்பழிப்பு மற்றும் தாக்குதல் உட்பட பல மனிதாபிமானமற்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதால் 2007ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஐக்கிய நாடுகளுக்கு டென்யா முறையிட்டது.

(ஆ) ஒரு பிராந்தியத்திற்குள் அதிகரித்துள்ள சட்டமுரணான போதைப் பொருட்கள் கடத்தலை தடுப்பதற்காக பிமா, கன்குன், பொகொடா மற்றும் மில்லி ஆகிய நாடுகள் போதைப்பொருட்களைச் சட்டமுரணாகக் கடத்துவதைத் தடுக்கும் உடன்பாடொன்றினை ஆக்கின. ஒப்பந்தத்தின் அனுபந்தமானது போதைப்பொருள் வியாபாரத்திற்கு வசதிசெய்து கொடுப்பதாகக் கருதப்படும். சில நடவடிக்கைகளை தடுக்கின்றது. தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் 'வளர்த்தல், பராமரித்தல் மற்றும் போதைப்பொருட்களை கொண்டு செல்லல்' என்பனவற்றை உள்ளடக்கியது. சில மாதங்களுக்குப்பிறகு பிமா, கன்குன் மற்றும் மில்லி ஆகிய நாடுகள் குறித்த பொருத்தனையின் திறத்தவராக பொகொடா உள்வாங்கப்பட்ட பிறகும் கூட பொகொடாவில் போதைப்பொருட்கள் விட்டுத்தோட்டத்தில் வளர்க்கப்படும் செடிகளாக பயிர்செய்யப்படுவதனையும் அவை பொகொடா அரசினால் ஊக்கப்படுத்தப்படுவதனையும் அறிந்து கொண்டன.

5. ஒவ்வொரு இறைமையுடைய சுதந்திரமான நாடும் யுத்தம்புரிவதற்கான உரிமையை அனுபவிக்கின்றது.

கருத்திடுக (Comment)

6. (அ) எந் நிலைப்பாடுகளின் கீழ் பொருத்தனையானது சட்டமுரணானதாகும், ஒத்திவைக்கப்படும் அல்லது முடிவுறுத்தப்படும் என்பதனை ஆராய்க. உமது விடையினை உதாரணங்களுடன் ஆதாரப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) பனானாக் குடியரசும் அப்பிள் குடியரசும் பசுபிக் சமுத்திரத்தினை முகப்பு நோக்கியதாக அமைந்துள்ள இரு கரையோர நாடுகளாகும். 2000ம் ஆண்டு இரு நாடுகளினதும் கரையோரங்களிலும் இருந்து 20 NM இட்குள்ளாக கழிவுகள் சேகரிப்பதனை தடுப்பதாக பொருந்தனை ஒன்றினை பனானா குடியரசும் அப்பிள் குடியரசும் ஏற்படுத்திக்கொண்டன. நீண்டகாலமாக எல்லா கரையோர நாடுகளாலும் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வழமையான நடபடியாக அது இருந்தது. பனானா நாட்டின் அயல் நாடான பீச் நாட்டின் வெளிநாட்டு அமைச்சர் 2001ம் ஆண்டு தமது உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்ட சந்தர்ப்பத்தில் குறித்த உடன்பாட்டில் உள்ள பிரிவுகளை முழுமையாக ஏற்பதாக பகிரங்க அறிக்கை விடுக்கின்றார். அதே வேளை, மெலன் எனும் நாடு குறித்த வழக்காற்றுக் காலப்பகுதியை தீவிரமாக மறுப்பதுடன் 20 NM எல்லையுள் கழிவுகள் சேர்ப்பதில் தொடர்ச்சியாக ஈடுபட்டது. 2006ம் ஆண்டு சனத்தொகை வளர்ச்சி காரணமாக பீச் நாடு 18 NM கடல் எல்லைக்குள் கழிவுகளை சேர்க்கத் தொடங்கியது.

பீச் மற்றும் மெலன் ஆகிய நாடுகளின் பிழையான செயற்பாட்டிற்கு எதிராக பனானா குடியரசும் அப்பிள் குடியரசும் சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்கின்றன.

சர்வதேச நீதிமன்றத்தில் பிரயோகமுடைய சட்டங்களின் மீது திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

7. பின்வருவன எவையேனும் **இரண்டினைப்பற்றி** குறிப்பு எழுதுக.

(அ) நாடுகளின் செயற்பாடு எனும் கோட்பாடு

(ஆ) ஐக்கிய நாடுகளை மீள் கட்டமைத்தல்

(இ) சர்வதேச நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்தினை தூண்டுதல்.

8. தங்கத்தினை ஏற்றுமதி செய்வதில் பிரதானமாக தங்கியிருக்கும் மினெர்வா சோசலிச குடியரசானது ஓர் அபிவிருத்தியடைந்துவரும் நாடாகும். மினெர்வாவின் ஐக்கிய நாடுகளின் நிலையான தூதுவர் வலுவுக்கு வரும்வகையில் மிகவும் அண்மையில் உருவாக்கப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிரான சமவாயமான 2006ம் ஆண்டின் பயங்கரவாதத்தினை முழுமையாக ஒழித்தல் மீதான கொழும்பு சமவாயத்தினை

உறுதிப்படுத்தினார். வெளிபடையான சட்டவாக்கம் இல்லாமல் பொதுவாக சர்வதேச சமவாயங்களின் பிரிவுகள் மினெர்வாவின் உள்நாட்டுச் சட்டங்களின் பகுதியாகாது. 2008ம் ஆண்டு சனவரி மாதம் மினெர்வாவின் பிரசையான பினு காவுலில் உள்ள பயங்கரவாதக் குழு ஒன்றிற்காக ஆயுதங்களை கடத்தியமைக்காக அராபியா பொலிசாரினால் கைது செய்யப்பட்டார். பிறகு காவுலில் ஆயுதக்கடத்தலில் ஈடுபடும் மிகவும் தேவைப்படுத்தப்படும் ஆட்கள் பட்டியலில் பினு முதல் நிலையில் இருப்பவர் என கண்டறியப்பட்டது. மினெர்வா மற்றும் காவுல் ஆகிய இரு நாடுகளும் தமது பிராந்தியங்களுக்குள் பினு மீளொப்படைக்கப்படல் வேண்டும் என வேண்டின. அராலியான மனிதாபிமான அடிப்படையில் அதனை மறுத்தது.

(குறிப்பு: மினெர்வா அரசின் அரசியலமைப்பானது 1978ம் ஆண்டின் இலங்கையின் அரசியலமைபினை ஒத்திருக்கின்றது. மேலும் காவுல் அராபியாவுடன் இருதரப்பு மிளொப்படைப்பு பொருத்தனை ஒன்றிற்கு உட்பட்டிருந்தது)

(அ) பினுவிற்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்வதறகு எந்நாட்டிற்கு நியாயாதிக்கம் உள்ளது எனவும், எவ்வடிப்படையின் மீது வழக்கிடலாம் எனவும் சுருக்கமாக ஆராய்க.

(ஆ) பினு மினெர்வாவிற்கு மீளொப்படைக்கப்பட்டும் மற்றும் மினெர்வா 2006ம் ஆண்டின் பயங்கரவாதத்தினை முழுமையாக ஒழித்தலின் கொழும்பு சமவாயத்தின் பிரிவுகளின் கீழ் வழக்கிட விரும்பினால் என்ன நிகழும்?

(இ) அராபியா பினுவிற்கு எதிராக வழக்கிட விரும்பாவிட்டாலோ அல்லது வழக்கிடாவிட்டாலோ உமது கருத்தின்படி மினெர்வாவிற்கும் காவுலிற்கும் கிடைக்கும் நிவாரணங்கள் எவை?

(பதிப்பரிமையுடையது)